2016 ஆகஸ்ட் 2]

13—

ஆரம்ப சுகாதார நிலையம்

***44—திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் ஒன்றியம், வளத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் சுகாதார வட்டம், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் வளத்தூர் கிராமம் உள்ளது. இந்தக் கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 3,325 ஆகும். விதிமுறைகளைப் பூர்த்தி செய்ய இயலாத காரணத்தினால், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்காகவும் எவரிடமும் எப்போதும் எம் மக்கள், எந்நாளும் கையேந்தி நிற்காத காலத்தை உருவாக்க அனுதினமும் உழைத்துவரும் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் திருநாட்டையே முன்னோடித் திட்டங்களால் வழிநடத்தக்கூடிய சாதனைத் தலைவி, ஆடுகளும், மாடுகளும் அழகுடைய வீடுகளும் விரைவினிலே நீ தருவாய், ஈடு இணைக்கோர் தெய்வம் உண்டோ எனக்கு உனையன்றி சரணமுண்டோ? வாடும் நிலத்தைக் கண்டிரங்கும் மழை போல, உள்ளம் உண்டோ? நாடும் மணிச் செல்வம் எல்லாம்*

நன்கருள்வாய் திருவே, என நான் தினம் துதிக்கும் என் அன்னை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Madras High Court 26-6-1862 அன்று இங்கிலாந்து மகாராணி Queen Victoria அவர்களின் Letter of Patent என்று உத்தரவின்மூலம் உருவாக்கப்பட்டு, நேற்றுவரை High Court, Madras என்று மதராஸ் உயர் நீதிமன்றம் அழைக்கப்பட்டு வந்தது. அதை தமிழ்நாடு உயர் நீதிமன்றம், High Court of Tamil Nadu (மேசையைத் தட்டும் ஒலி) என்று அழைக்க வேண்டுமென்ற தீர்மானத்தை இயற்றிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வழக்கறிஞர் என்ற முறையிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, வேலூர் மாவட்டத்திலே மிகப் பெரிய தொகுதி. 2,68,000 வாக்காளர்களைக் கொண்ட தொகுதி. இந்தத் தொகுதியிலே குடியாத்தம் ஒன்றியம், வளத்தூர் பிர்கா பகுதியில் வளத்தூர், கீழ்ப்பட்டி, உள்ளி, சின்னத்தோட்டாலம், கருணீகசமுத்திரம் மற்றும் குழுதிகை ஆகிய 6 கிராம ஊராட்சிகள் இருக்கின்றன. சுமார் 25 கிராமங்கள் உள்ளன. அங்கே 16,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராம மக்கள் சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல இரயில்வே இருப்புப் பாதையைக் கடக்க வேண்டியுள்ளது. இரயில்வே கேட் மூடியிருந்தால் அவசர நேரங்களில் நோயாளிகள், குறிப்பாக, கர்ப்பிணிப் பெண்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்பது இந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. எனவே, ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 2]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் குறிப்பாக, ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கூடுதலாக உருவாக்கி, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு வலு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஐந்தாண்டுகளிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வரலாற்றுச் சாதனையாக, 187 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை ரூ.146.82 கோடி செலவிலே அமைத்து, மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய குடியாத்தம் தொகுதிக்கு, கடந்த ஐந்தாண்டு கால மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 6 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை புதிதாகக் கொடுத்து, அவை திறக்கப்பட்டு, நோயாளிகள் பயன்பெற்று வருகிறார்கள். இருப்பினும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், வளத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி இருக்கிறார்கள். இதுகுறித்து துறை ரீதியாக உரிய ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களுக்காகவே அம்மா' என்று செயலாற்றி வரும் மாண்புமிகு அம்மா அவர்கள் எனது கோரிக்கையை ஏற்று, விரைவில் அந்தப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, எனக்கு இந்த வாய்ப்பினை அளித்து, சமூக நீதி காத்து, தமிழினம் காத்து, அனைத்துத் தமிழரையும் அரணாகக் காத்து வரும் அன்னை,* 'There is a wisdom of the head and there is a wisdom of the heart' *என்று* Charles Dickens *கூறிய ஞானத்தைக் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதியில் உள்ள ஆலங்குளம் ஒன்றியம், மாறாந்தை கிராமத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், பாப்பாக்குடி ஒன்றியம், உடையாங்குழி பஞ்சாயத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு சமவெளிப் பகுதியானால், 30,000 மக்கள் தொகை இருக்க வேண்டும், மலைப் பகுதியாக இருந்தால், 20,000 மக்கள் தொகை இருக்க வேண்டுமென்ற விதிமுறை இருக்கிறது. ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், இன்னொரு சுகாதார நிலையத்திற்கும் இடையில் 8 கிலோ மீட்டர் தூரம் இருத்தல் வேண்டுமென்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமங்கள் இந்த விதிமுறையைப் பூர்த்தி செய்வதாக இருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பாப்பாக்குடி ஒன்றியத்திலேகூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடந்த காலத்திலே இடைக்கால் என்ற புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை தங்களுக்குத் தந்திருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள். (குறுக்கீடு)

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) துணைக் கேள்வி ஒன்றுதான் கேட்க முடியும், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், நீங்கள் பேசுங்கள்.

2016 ஆகஸ்ட் 2]

முற்பகல் 10-55

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதி, கரைப்புதூர் என்ற சிறிய ஊராட்சியிலே, சென்னிமலைபாளையம் என்ற கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த எளிய தொண்டனாகிய என்னை, கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்த என்னை, ஒன்றியக் கழகத்தினுடைய அவைத் தலைவராக, ஒன்றியக் கழகத்தினுடைய துணைச் செயலாளராக, பொதுக் குழு உறுப்பினராக, மாவட்ட எம்.ஜி.ஆர் மன்றத்தினுடைய செயலாளராக கழகப் பணியாற்றுவதற்கும், 1996 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டுவரை கரைப்புதூர் ஊராட்சிமன்றத் தலைவராகப் பணியாற்றுவதற்கும், இப்பொழுது 15-வது சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிடவும், இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பும் நல்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது கன்னிப் பேச்சைத் துவங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதிக்குட்பட்ட பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சியில் சுமார் 30 ஆயிரம் பேர் வசித்து வருகிறார்கள். இந்த ஊராட்சியில் சலவைப் பட்டறைகளும், பனியன் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. வெளி மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் அதிகம் பேர் வசித்து வருகிறார்கள். இங்கு இருப்பவர்கள் மருத்துவம் பார்ப்பதற்கு 7 கி.மீ. தூரத்திற்கு அப்பால் உள்ள திருப்பூர் அல்லது பல்லடம்தான் செல்ல வேண்டும். ஆகவே, மக்கள் நலனிற்காக விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கரைப்புதூர் ஊராட்சி, உப்பிலியபாளையம் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர ஆவன செய்யுமா என தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்றபொழுது ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும். ஏனென்றால், மருத்துவ வசதிக்காக ஏழு கிலோ மீட்டர் தூரம்

மக்கள் செல்ல வேண்டிய நிலை உள்ளது என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் மாண்புமிகு உறுப்பினருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளினாலே இன்றைக்கு அரசு மருத்துவமனையைத் தேடி மக்கள் என்ற நிலையை மாற்றி, மக்களைத் தேடி மருத்துவர் குழு என்ற அடிப்படையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) மிகச் சிறப்பாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடமாடும் மருத்துவக் குழுக்களை அமைத்திருக்கிறது. ஒரு புறம் 8 கி.மீ.—க்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், 416 நடமாடும் மருத்துவக் குழுக்கள், hospital on wheels இருக்கின்றன. இந்த மருத்துவக் குழுக்கள் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத கிராமங்கள், குக்கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று, அங்கே நோயாளிகளைச் சந்தித்து, தொடர்ந்து மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விதிமுறைகளை பூர்த்தி செய்கின்றபட்சத்தில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உறுப்பினருடைய கோரிக்கையை கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதியில் ஒட்டன்சத்திரத்திலிருந்து திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு செல்கின்ற சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள காரணத்தால், அடிக்கடி விபத்து ஏற்பட்டு நிறையப் பேர் மரணமடைந்து விடுகிறார்கள். ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் விபத்துக்குள்ளானவர்களை, பிரேத அறுவை சிகிச்சை செய்கின்ற mortuary building மிகவும் சிதிலமடைந்துள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கட்டடத்திற்கு குளிர்சாதன வசதியோடு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 2]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை குறித்து துறை ரீதியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். விபத்துகள் ஏற்படுகின்றபோது,* golden hour *என்று சொல்லக்கூடிய, குறிப்பிட்ட அந்த காலத்திற்குள்ளாக 108 ஆம்புலன்ஸ்கள் விரைந்து செயல்படுகின்றன. மேல்சிகிச்சைகளுக்கெல்லாம் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்து, கட்டமைப்பு வசதிகளையும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு மிகச் சிறப்பாக இன்றைக்கு வடிவமைத்து செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

விவசாயிகளுக்கு பாதுகாப்பு

***54-திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் பலா மற்றும் முந்திரி விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், ஏழையெளிய மக்களையெல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய காவல் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதம் வணங்குகிறேன்.*

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர், முந்திரி, பலா விவசாயிகளுக்கு அரசு பாதுகாப்பு அளித்திடுமா என்று ஒரு வினாவினை எழுப்பியுள்ளார்கள். மக்களால் நான், மக்களுக்காக நான் என தவ வாழ்வு வாழ்ந்து தமிழகத்தையே காப்பாற்றி